
உ

சிவமயம்.

# முருகாதுதி.



திருச்சி. பெரம்பலூர்தாலுக்கா

அரும்பாவூர். காத்தான்மூப்பனர் குமாரன்

காமாக்ஷிமூப்பனரால்

இயற்றப்பட்டு

சென்னை பழையவண்ணாரப்பேட்டை

...ணர் அச்சுக்கூடத்திற்

...பிக்கப்பட்டது.

...912.

ஆ26:417
M12
147142

உ

சிவமயம்.

# முருகர் துதி.

## விநாயகர் துதி.

ஆதிபரம்பரை அம்பலத்தரசே
ஆனந்தரூபா போற்றி
சோதியும் சுடரொளியுமாய் நின்ற
சூட்சுமமுக்கண்ணா போற்றி
உலகத்தோரார்பரிக்க
உமைபாலனாக ஓங்காரநீதியாய்
கந்தவேள் முன்பிறந்தோன்
கரிமுகநாதா போற்றிபோற்றி.

## முருகர் துதி.

ஒங்காரவேளாய் நின்று, ஆங்காரமான எதிரிடையோனை வேலுக்கிரையாக்கி வேம்பனைஎநின்று, நாலுக்கிரங்கிடும் நாதாந்தசாரமே, பாலுக்கிரங்கிடும், வாலைக்குதித்தவடி வேல்நாதாபோற்றி. (1)

சங்கரநீன்ற சண்முகன்நீ, சரவணபவனன்நீ, முருகன்நீ மூவி விரண்டுமுக முக்கண்ணன்நீ, கார்த்திகேயன்நீ, கங்கை மைந்தன்நீ, வரைபகையறிந்தோன்நீ வரமருள் கொடு ப்போன்நீ, கோழிக்கொடி குமரனைய்நின்று, குழந்தைவ டிவான மயூரவாகனு சதியாருங்காணேன், தோகைமயி ல்வீரா பழனியில்வாழும், ஈராறுகையாளாயென்னை வந்து ரட்சித்தருள்வாய். (2)

சத்தியாய் நின்று, சிரவணபவனுய் வந்தவா மூவருமமைத்தவா, முப்பத்துமுக்கோடி தேவரிஷியீஸ்வரர்களானவா அரகாபவனுய்வந்து, அரும்பொருள்புரியும் தெய்வீகபரம்பொருளாய் நின்றவா, இதுசமயம் முருகா, இதுசமயம்எனேக்கார்க்க, தோகைமயில்வீரா பழனியில்வாழும ஈராறுகையாளா எனைவந்துரட்சித்தருள்வாய். (3)

சூரரைவதைத்தவா, இடும்பன்பலத்தையடக்கி ஏவலில்வைத்தவா, எங்கும்பரப்பிரமமாய் நின்று, எவருள்ளத்தில் நிறைந்தவா, எண்பத்துநாலுலட்சம் யோனியில்நிறைந்தவா, எவ்வுருருபமானவா, இதுசமயம்முருகா, இதுசமயம் எனேக்கார்க்க, தோகைமயில்வீரா பழனியில் வாழும், ஈராறுகையாளாவெனைவந்துரட்சித்தருள்வாய்.

சத்திசிவதன்னருளால் காங்கேயன், செவ்வேள்சிலம்பனென்று பேரெடுத்தாய், சர்வலோகத்திற்கும், சற்குருவானுய்நீ, சல்லெனறுவந்தவொரு அசுரர்களைக்கொன்றாய் நீ, சண்முகனுயவதரித்தாய்நீ, சத்திசித்தர் பதினெண்பேருக்குபதேசித்து, சகலமந்திரமாமுனிக் கருள்செய்த குமரா, தோகைமயில்வீரா பழனியில்வாழும், ஈராறுகையாளா யெனைவந்துரட்சித்தருள்வாய். (5)

ஜகத்தைரட்சிக்க விஷ்ணுவாயாகி, ஜகஞ்சிருஷ்டிக்க பிரமனுய்நின்றவா, உபசம்மாரம்செய்ய உருத்திரனுய்நின்று, உபமடியார்களுக் கருள்புரிய, வடிவேலாயவதரித்தவா, வாசுதேவனுய்நின்றவா, இதுதருணம்வடிவேலா, இது தருணம் எனேக்கார்க்க, தோகைமயில்வீரா பழனியில் வாழும், ஈராறுகையாளா எனைவந்துரட்சித்தருள்வாய்.

ஓங்காரமான முதலெழுத்தாயாகி, உமாபிராட்டியாருக் குபமசனுய்வர்தவா, ஓம்கணபதியாய்நின்று, ஓங்காரகந்த

வேளா யவதரித்தவா, ரிஷபமேறும்சிவனைய்நின்றுசெல் வக்குமரேசனை யவதரித்தவா, நின்னடிமைக்கிரங்கி வா வா, இதுதருணம்முருகா, இதுதருணம் எனைக்காக்க, தோகைமயில்வீரா பழனியில்வாழும், ஈராறுகையாளா யெனைவந்தாட்சித்தருள்வாய். (7)

அண்ணாமலையில் அருணகிரிநாதனைய்நின்று, ஆஞ்சநேயருக் கதிகாரியான இராமனாய்வந்தவா, அத்திபுடை தரித் தோனையானவா, அகிலமெங்கும் புகழ்படையும் ஆன்ம தத்துவரூபமாயானவா, இதுசமயம்கந்தா, இதுசமயம் எனைக்காக்க, தோகைமயில்வீரா பழனியில்வாழும், ஈராறும்கையாளா யெனைவந்தாட்சித்தருள்வாய். (8)

மான்வயிற்றிலுதித்து குறமகன்வளர்த்த, குமரவள்ளியைக் குறிகொண்டவா, சாம்பசிவசங்கரனைய்நின்று, சற்குரு வனுதியான மூலமாயானவா, ஆதிமுதலெழுத் தோங் கார அரகரபவனனையாகி, அம்பிகைபொன் அம்பலவா ணனையானவா, அகம்பொருள் தீர்ப்பவா, அருட்பொருள் கொடுக்க ஏழைக்கேழையாயவருபவா, இதுதருணம் வேலா, இதுதருணம்எனைக்காக்க, தோகைமயில்வீரா பழனியில்வாழும், ஈராறுகையாளா எனைவந்தாட்சித் தருள்வாய். (9)

கருவூரிலிருந்துயான், கர்மநகர்வந்தடுத்த நாள்முதலாய், உன் னையே கதியெனறு, உருக்கமுடன்யானினைந்து, பொய் யான உடலடுத்த, ஐம்பொறியினால்கர்மவினையையடை யகருதினேன், இதுசமயம்முருகா, இதுசமயம்யான்பா ழ்வினைக்குள்ளாழ்ந்தாமல், தோகைமயில்வீராபழனியில் வாழும், ஈராறுகையாளா யெனைவந்தாட்சித்தருள்வாய்

ஐயுங்கிடாடர்ந்துயான், விழியும்சொருகி அறிவொழிந்து,பொய்யானவுடலைச் சதமென்றெண்ணி போக்குகின்றேன் காலம், காலபேதத்தினாலுன் சூட்சத்தையறியாமல் கண்ணிமைபோற் றுடிக்கின்றேன், இதுசமயம்முருகா, இதுதருணம்எனைக்காக்க குருபரனேவாவா, தோகைமயில்வீரா பழனியில்வாழும், ஈராறுகையாளா யெனைவந்துரட்சித்தருள்வாய். (11)

அச்சமின்றியானுன்னை, அறியாமல்அறிவிழந்தேன், எண்சாணுடம்பில்உன்னை அறியாமல்பிதற்றுகின்றேன்,மனதால் மயங்குகின்றேன், காமநோயினாலுன் சூட்சத்தையறியாமல், கர்மவினையிலாழ சகுதினேன், இதுசமயம்முருகா, இதுதருணம் எனைக்கார்க்க, தோகைமயில்வீராபழனியில்வாழும், ஈராறுகையாளா யெனைவந்து ரட்சித்தருள்வாய். (12)

அந்திசந்திகாலை யனுதினமும்ஜெபதபமா யைம்புலன்களடக்கவே, சந்தியாவந்தனமாகவே கிரிகைகள், சாதித்துநாடித்துதித்துவந்தேன், குருபரனேயென துள்ளத்திருத்தி, குகனேயெனை யாளவருவாய், இதுசமயம்வேலா, இதுதருணம் எனைக்கார்க்க, தோகைமயில்வீரா பழனியில்வாழும், ஈராறுகையாளா யெனைவந்து ரட்சித்தருள்வாய். (13)

கல்லுக்குள்ளிருக்கும் தேரைக்கு, அமிர்தமாய்ப் பருகவில்லையா, தழைத்திடும்வாரகிரியில் பன்றிக்குட்டிக்கு, தந்தைதாய்ப்பன்றியாய் தன்னமிர்தமூட்டவில்லையா, இன்னும்எளியேன்பேரில் இரக்கம் இரங்கவில்லையா இனி கதியாருங் காணேன், ஆலகாலவிஷத்தை யுண்டவா, ஓம்ஸ்ரீயும்ஐயும்கிலியும், சவ்வும்வாவாவா,தோகைமயில்

வீரா பழனிபில்வாழும், ஈராறுகையாளா யெனைவந்து ரட்சித்தருள்வாள். (14)

நித்தநித்தம்நீராடி, நின்னைத்தரிசித்துநின்பலனையடையாமல், உகைபரபிர்மத்தின், உற்பகற்பவஸ்தையையறிந்து ஒன்றுக்கும், உதவாதஉப்பில்லாப் பண்டம்போல், உண்மைகெட்டேன் மெய்மறந்தேன், வேலாவேண்டிக்கொள்ளுவோர்க்கிசைந்தவா, தாராயாவரம் அன்புருகிவாவாவா, கண்பார்பார் கருத்திற்கிசைந்தவா கதியினி யாரும் காணேன், தோகைமயில்வீரா பழனியில்வாழும், ஈராறுகையாளா யெனைவந்து ரட்சித்தருள்வாய். (15)

பாசிவமென்ற சாதுரிவார்த்தையும், சற்குருநாதன் பரமபதத்தையும், பணிந்துநான்பாடி விளையாடித்திரியவும் பார்மீதுபரஞரா தாரத்தையும் அன்புடன்கொண்டாடி, ஆனந்தித்திரியவும், ஆவலுடன்துதித்து, அருமைகொண்டாடவும், தோண்டுசெய்துகாமாட்சி,துக்கத்தைநீக்கி, தொலையாய்ப்பிறவியை, தொலைத்திடவே தொண்டனுனேன், தோகைமயில்வீரா பழனியில்வாழும், ஈராறுகையாளா யெனைவந்து ரட்சித்தருள்வாய். (16)

(ஆதிபரம்பொருளே துணை.)

O26:417
N12

14741